# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2094/37 - 2018 ඔක්තෝබර් මස 26 වැනි සිකුරාදා - 2018.10.26

*2094/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டம்**

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் வாசகத்துடன் வாசிக்க வேண்டிய 41 ஆவது வாசகத்தின் கீழ், விளையாட்டுத்துறை அமைச்சரினால் வகுக்கப்பட்ட கட்டளை.

பைசர் முஸ்தபா,
சனாதிபதி சட்டத்தரணி,
மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும்
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2018, ஒற்றோபர் 25.

கட்டளை

மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா (சனாதிபதி சட்டத்தரணி) ஆகிய நான், 2073/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஹேவா தொண்டிலகே கமல் பத்மசிரி “இலங்கை கிறிக்கெட்” நிறுவகத்தின் நிருவாக செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுக்கும் வகையில் அதன் நிருவாக மற்றும் ஏனைய ஒவ்வொரு தேவையான செயற்பாடுகளுக்காக 2018, யூன் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அதன் தகுதி வாய்ந்த பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதனாலும் ;

இதற்கமைய “இலங்கை கிறிக்கெட்” நிருவாகத்தின் செயற்பாடுகளை பொருத்தமான முறையில் நிறைவேற்றுவதற்காக அதன் நிருவாக மற்றும் ஏனைய அவ்வவ் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அத்துடன் மேற்கூறப்பட்ட தகுதிவாய்ந்த உத்தியோகத்தருக்கு உதவி வழங்குவதற்காக மற்றும் ஆலோசனை வழங்கும் வகையில் “இலங்கை கிறிக்கெட்” நிறுவகத்திற்கு உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுத்து நியமிப்பதற்காக உத்தியோகத்தர் தெரிவினை நடாத்தும் வரை குழுவொன்றை நியமிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தினால் சர்வதேச கிறிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையான சர்வதேச கிறிக்கெட் கவுன்சிலுக்கு உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.


1A - G 4297—507 (2018/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இதற்கமைய மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா (சனாதிபதி சட்டத்தரணி) ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் (மறுசீரமைப்பு) 41 ஆவது வாசகத்திற்கு அமைய,

(அ) ''இலங்கை கிறிக்கெட்'' இன் நிருவாக செயற்பாடுகளை பொருத்தமான வகையில் மேற்கொள்வதற்காக அதன் நிருவாக மற்றும் ஏனைய அவ்வவ் தேவையான செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக 2018, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரை ''இலங்கை கிறிக்கெட்'' இன் தகுதிவாய்ந்த உத்தியோகத்தராக நியமிக்கின்றேன்.

(ஆ) ''இலங்கை கிறிக்கெட்'' நிறுவகத்தின் நிருவாக செயற்பாடுகளை பொருத்தமான முறையில் தொடர்ச்சியாக முன்னெடுப்பற்காக அதன் நிருவாக மற்றும் ஏனைய அவ்வவ் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அதன் தகுதிவாய்ந்த உத்தியோகத்தருக்கு உதவி வழங்கும் வகையில் கீர்த்தி மிக்க ஐந்து பேர் நியமிக்கப்படுவர்.

(இ) உத்தியோகத்தர் தெரிவை நடாத்தி ''இலங்கை கிறிக்கெட்'' நிறுவகத்திற்கு உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை மேற்கூறப்பட்ட ஆலோசனைக் குழு தொடர்ச்சியாக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

(ஈ) அக் குழுவின் அங்கத்தவர் ஒருவரின் மறைவு, இராஜினாமா அல்லது வேறு பாதிப்புக்களின் போது வேறு ஒருவரை விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அதற்காக பெயரிடும் வரை அதன் ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2018, மே மாதம் 31 ஆந் திகதிய 2073/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை 2018.10.29 ஆந் திகதி தொடக்கம் இத்தால் இல்லாதொழிக்கின்றேன்.

*11-414*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.